கோவையில் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் கட்டப்பட்ட பெரியார் அறிவுலகத்தை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்!









பெரியார் அறிவுலகம் : பள்ளி மாணவ - மாணவிகளுடன் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடினார்!

கோவை, நவ. 6 -

கோவை காந்திபுரத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட பெரியார் அறிவுலக நூலகத்தை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். அப்போது, அங்கு திரண்டிருந்த பள்ளி மாணவ, மாணவிகள் தி.மு.க. தலைவரை உற்சாகமாக வரவேற்றனர்.

சுயமரியாதையையும் பகுத்தறிவையும் பரப்புவதையே தம் வாழ்நாள் கடமையாகக் கருதிக்கொண்டு, தமிழினத்தின் மேன்மைக்காகத் தம் இறுதிமூச்சு வரை உழைத்து ஒளிவீசிய பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பெயரிலான அறிவுலகம் கோவையில் தி.மு.க. ஆட்சியில் கட்டிமுடிக்கப்பட்டது. 2024-25 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், அறிவிக்கப்பட்டு 6.11.2024 அன்று அடிக்கல் நாட்டி, கோவை மத்திய சிறைச் சாலைக்குச் சொந்தமான இடத்தில், 1.98 இலட்சம் சதுர அடிப் பரப்பளவில் தரை மற்றும் ஏழு தளங்களுடன் சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரியார் அறிவுலகம் தி.மு.க. ஆட்சியின் போது கட்டி முடிக்கப்பட்ட நிலையில், அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

கோவைக்கு பெரியார் அறிவுலகம் தந்த திராவிட மாடல் நாயகர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு திராவிடர் கழகம் சார்பில் பாராட்டு விழா கோவை வ.உ.சி மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடை பெற்றது. திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடை பெற்ற நன்றி பாராட்டு விழாவில், சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு ஏற்புரை வழங்கினார். இதற்காக சென்னையிலிருந்து கோவை சென்ற தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்,

கோவை காந்திபுரத்தில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ள பெரியார் அறிவுல நூலகத்தை நேரில் சென்று பார்வையிட்டார். அவருடன் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி உள்ளிட்டோரும் பெரியார் அறிவுலகத்தை பார்வையிட்டனர்.



பெரியார் அறிவுல நூலகத்திற்கு வந்திருந்த பள்ளி மாணவ, மாணவிகள் தி.மு.க. தலைவரை உற்சாகமாக கையசைத்து வரவேற்றனர். பின்னர், நூலகத்திற்கு வந்திருந்த மாணவர்களுடன் தி.மு.க. தலைவர் கலந்துரையாடினார்.

பெரியார் அறிவுல நூலகத்திற்கு வந்திருந்த பொதுமக்களும், மாணவர்களும், திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடன் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்... மேற்கு மண்டல மக்களுக்கான மாபெரும் அறிவுக் களஞ்சியமாக, உலகத்தரத்தில் பெரியார் அறிவுலகத்தை உருவாக்கி கொடுத்த தி.மு.க. தலைவருக்கு மாணவர்களும், பொதுமக்களும் நன்றி தெரிவித்தனர்..

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர்கள் கே. என்.நேரு, எ.வ.வேலு, செந்தில்பாலாஜி, முத்துச்சாமி, மு.கண்ணப்பன், பொங்கலூர் பழனிச்சாமி, வெள்ளக்கோவில் சாமிநாதன், சக்கரபாணி, துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், மாவட்டச் செயலாளர்கள் தொண்டா முத்தூர் ரவி, தளபதி முருகேசன், துரை செந்தமிழ்ச்செல்வன், மேயர் ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, பிரகாஷ், எம்.எல்.ஏ.க்கள் ஜெயராமகிருஷ்ணன், வசந்தம் கார்த்திகேயன், தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், முன்னாள் எம்.எல்.ஏ. சந்திரகுமார், தி.மு.க. மற்றும் திராவிடர் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. தலைவர், சென்னை கோட்டூர்புரத்தில் ஆசியாவிலேயே மிகப் பிரமாண்டமான அண்ணா நூற்றாண்டு நூலகத்தை முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கினார் என்று பெருமிதம் தெரிவித்தார். ‘திராவிட மாடல்’ ஆட்சியில் மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டது என்றும், தமிழ்நாட்டின் முதல் பொதுநூலகமான எழும்பூர் கன்னிமாரா நூலகம் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டது என்றும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி நன்றி!

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, கோவையில் பிரம்மாண்டமான பெரியார் அறிவுலகம் அமைத்த தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்தார்.